# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2015/2016 (ஆகஸ்ட் 2018)

## TLS 2223 யாப்பும் அலங்காரமும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

1. (அ) அசை, சீர், தளை என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (06 புள்ளிகள்)

   (ஆ) பின்வரும் செய்யுளை அதில் இடம்பெற்றுள்ள சீர், தளை அடிப்படையில் பிரித்துக் காட்டுக.

   செல்வப்போர்க் கதக்கண்ணண் செயிர்த்தெறிந்த சினவாளி
   முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
   எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
   மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே

   (14 புள்ளிகள்)

2. (அ) தண்டியலங்காரம் கூறும் நான்கு வகைச் செய்யுட்களும் யாவை? (02 புள்ளிகள்)

   (ஆ) அவற்றுள் தொடர்நிலைச் செய்யுளை வகைப்படுத்தி விளக்குக. (18 புள்ளிகள்)

3. (அ) உருவக அணி என்றால் என்ன? (03 புள்ளிகள்)

   (ஆ) தண்டியலங்காரம் கூறும் உருவக அணிகளை உதாரணங்களுடன் விளக்குக. (17 புள்ளிகள்)

### பகுதி – II

4. தமிழில் பயின்று வந்துள்ள சித்திரக் கவிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் இயல்புகளை விளக்குக. (20 புள்ளிகள்)

5. ஆசிரியப்பாவின் இயல்பை விளக்கி, அது உருவாகி வளர்ந்த வரலாற்றைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

6. “வெண்பா, இலக்கணக் கட்டுப்பாடுகளை அதிகமுடைய யாப்பு வகையாகும்” ஆராய்க. (20 புள்ளிகள்)

7. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழ்க் கவிதைச் செல்நெறியில் ஏற்பட்ட வளர்ச்சி, மாற்றங்களை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)